**ஹெட்டன் - நுவரெலியா வீதி முன்னேற்றச் செயற்திட்டத்தின் - 2014**

ஹெட்டன் - நுவரெலியா வீதி முன்னேற்றச் செயற்திட்டத்தின் 2014 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிசார் கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் பொருளாதார அபிவிருத்தி ஒத்துழைப்பு நிதியத்திற்குமிடையேயான 2010 நவம்பர் 02 ஆந் திகதிய எஸ்ஆர்ஜ – 20 கடன் உடன்படிக்கையுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்பிரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், குறிக்கோள், நிதியளிப்பு, மற்றும் காலம்

செயற்திட்டக் கடன் உடன்படிக்கையின் பிரகாரம், நெடுஞ்சாலைகள் மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சு நிறைவேற்று முகவர் ஆகும். செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவர் வீதி அபிவிருத்தி அதிகார சபையாகும். ஹெட்டன் தொடக்கம் நுவரெலியா மாவட்டம் வரை சந்தைக்கான அணுகுமுறையை முன்னேற்றமடையச் செய்து வேலை வாய்ப்பையும் சமூக சேவைகளையும் ஏற்படுத்துதல் மூலம் தென் மாகாணத்தில் சமூக, பொருளாதார வளர்ச்சியை தூண்டச் செய்து அபிவிருத்திக்கான சமச்சீரான தன்மையை உருவாக்குதல் செயற்திட்டத்தின் நோக்கமாகும். ஆகவே, ஹெட்டன் தொடக்கம் நுவரெலியா வரை 35.6 கிலோ மீட்டரை அபிவிருத்தி செய்யவும் புகையிரத கடவைப் பாலத்தின் கீழ் கொட்டகல சுரங்கம், நுவரெலியா நிர்மாண வேலையை நடாத்தவும் திட்டமிடப்பட்டது. கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 5,618 மில்லியனுக்குச் சமமான 49.92 மில்லியன் அமெரிக்க டொலர்களாகும் இதில் ரூபா 4,501.2 மில்லியனுக்குச் சமமான 40 மில்லியன் அமெரிக்க டொலர்களைப் பொருளாதார அபிவிருத்தி ஒத்துழைப்பு நிதியம் வழங்குவதற்கென உடன்பாடு ஏற்பட்டது. 2011 டிசெம்பர் 01 இல் தனது நடவடிக்கைகளை ஆரம்பித்த செயற்திட்டம் 2015 டிசெம்பர் 31 அளவில் அதனைப் பூர்த்தி செய்யவுள்ளது.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.4 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு ஏற்ப நான் கணக்காய்வை மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு

திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற் கொள்கின்றாரேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டு மொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன். பின்வருவனவற்றை மதிப்பிடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவத்தின் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள், முதலியவற்றின் நம்பகத்தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) செயற்திட்டத்தின் நிதிசார் கூற்றுக்களில் காணப்பட்ட செலவினம் செயற்திட்டத்தால் பேணப்பட்ட நிதிசார் அறிக்கைகள் மற்றும் செயன் முன்னேற்ற அறிக்கைகளுடன் திருப்திகரமாக கணக்கிணக்கம் செய்யப்பட்டுள்ளனவா என்பதும்,

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடன் வழங்கும் முகவர் என்பவற்றின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைத் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) கடனின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் நிதியளிப்பு உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட விதப்புரைகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்,

(உ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள் மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டுள்ளனவா என்பதும்,

(ஊ) செயற்திட்டத்தின் அமுல்படுத்தலுக்காகக் கடைப்பிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்

(எ) நிதிக்கூற்றுக்களானவை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு ஏற்ப தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஏ) எனது முன்னைய ஆண்டுக் கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்களைத் திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

(ஐ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

## 2. நிதிசார்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

இதுவரையான எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமைய, இவ்வறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களால் எழும் சீராக்கல்களை தவிர,

(அ) செயற்திட்டமானது 2014 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கேடுகளைப் பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு அமைய 2014 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) வழங்கப்பட்ட நிதிகள் அவை வழங்கப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்களைத் திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும்,

(ஈ) நிதியளித்தல் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும்,
நான் அபிப்பிராயப்படுகிறேன்.

**2.2 நிதிசார் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

நிதிசார் கூற்றுக்களில் காட்டப்பட்ட ரூபா 42,000,000 செலவினமானது 2014 ஆம் ஆண்டின் ஒதுக்கீட்டுக் கணக்கில் சமர்ப்பிக்கப்பட்ட அதனோடொத்த ரூபா 41,472,008 உடன் இணக்கமுறாது ரூபா 527,992 வித்தியாசத்தைக் காட்டியது.

**3. நிதிசார் மற்றும் பௌதிகச் செலாற்றல்**

**3.1 நிதிப் பயன்பாடு**

மீளாய்வாண்டிலும் 2014 டிசெம்பர் 31 வரையிலுமான நிதியளிப்பு, வரவு செலவுத் திட்ட நிதி ஏற்பாடு மற்றும் நிதிப்பயன்பாடு என்பன தொடர்பான முக்கியமான சில புள்ளி விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| தோற்றுவாய் | கடன் உடன்படிக்கையின் பிரகாரம் நிதியளிக்கப்படவுள்ள தொகை | | மீளாய்வாண்டிற்காக பாதீட்டு மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்ட ஒதுக்கீடு | பயன்படுத்திய நிதி | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | மீளாய்வாண்டின் போது | | 2014 டிசெம்பர் 31 வரை | |
| | அமெரிக்க டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | அமெரிக்க டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | அமெரிக்க டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் |
| நன்கொடை முகவர் (EDCF) | 40.00 | 4,501.20 | 2,004.0 | 15.02 | 2,003.90 | 33.35 | 4,448.99 |
| இலங்கை அரசாங்கம் | 9.92 | 1,116.86 | 103.2 | 0.31 | 42.00 | 1.18 | 158.15 |
| மொத்தம் | 49.92 | 5,618.06 | 2,107.2 | 15.33 | 2,045.90 | 34.53 | 4,607.14 |

**3.2 பௌதீக முன்னேற்றம்**

2014 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு செயற்திட்டத்தால் மேற்கொள்ளப்பட்ட வீதிப் புனரமைப்பு வேலைகளினதும் ஏனைய நிர்மாண வேலைகளினதும் பௌதிக முன்னேற்றம் கீழே தரப்பட்டுள்ளது.

| நடவடிக்கை | முடிவுறுத்த எதிர்பார்க்கப்பட்ட திகதி | 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பௌதீக முன்னேற்றம் (%) | |
| --- | --- | --- | --- |
| | | இலக்கு | உள்ளவாறானது |
| (i) ஹெட்டன் தொடக்கம் நுவரெலியா வரையான வீதியை நிர்மாணித்தல் | 2015 மார்ச் 02 | 94.98 | 95.88 |
| (ii) கொட்டகல சுரங்கம் | 2015 மார்ச் 15 | 90.20 | 72.36 |
| (iii) நானுஓயா, கீழே செல்லும் வீதி (நுவரெலியா) | 2015 பெப்ரவரி 28 | 92.10 | 89.59 |

**3.3 ஒப்பந்த நிர்வாகம்**

பின்வரும் அதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) அஸ்பல்ட் வெயாரிங் கோர்ஸ்ஸைப் பயன்படுத்தி லிந்துல சந்தியில் 200 மீட்டர் நீளமான டயாகம வீதியை செயற்திட்டம் அபிவிருத்தி செய்துள்ளது. இதற்கான செலவு ரூபா 2,828,220 ஆகும். எவ்வாறாயினும், இந் நடவடிக்கையானது செயற்திட்டத்தின் பரப்புக்கு உட்பட்டதல்ல. குறித்த நபர்களிடமிருந்து இதற்கான அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 3 ஆம் தொகுதியினது 13.4 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட தொழில்நுட்ப மாதிரிகளுக்கமைய, ஒப்பந்தகாரர் பாதுகாப்பு நடவடிக்கைகளையும் திருப்திகரமான கட்டுப்பாட்டு ஏற்பாடுகளையும் செய்ய வேண்டுமாயினும், வேலை நடைபெறுகையில் அவற்றை ஒப்பந்தகாரர் மேற்கொள்ளவில்லை. ஐந்து செவ்ரன் பலகைகளைத் தவிர, கொட்டகல சுரங்கத்தில் எதிர்பார்க்கப்பட்ட போக்குவரத்து சமிக்ஞைகளும் வீதிக் குறியீடுகளும் இடப்படவில்லை என அவதானிக்கப்பட்டன.

மேலும், ரதெல்ல குறுகிய பாதையினூடான வீதி விபத்துகளைக் குறைப்பதற்காக போதியளவு எச்சரிக்கைப் பலகைகள் பொருத்தப்பட்டிருக்கவில்லை எனவும் அவதானிக்கப்பட்டது.

(இ) 2015 ஜுலை 14 அன்று வேலைத்தளத்தில் மேற்கொள்ளப்பட்ட நேரடிப் பரிசோதனையின்போது 8 முடிவுறாத வேலைகளும் பாதிப்புகளும் அவதானிக்கப்பட்டன. அவையாவன, பாலத்தினருகே 0+460 கிலோமீட்டர் தூரத்தில் நடைபாதையை அமைத்தமை W பீம் திருத்தப்பட்டமை, மதகில் உள்ள துவாரம் சுத்தப்படுத்தப்பட்டமை, கழிவு நீர்ப்பாதைச் சுவர்கள் திருத்தப்பட்டமை, கழிவு நீர்ப்பாதையின் உட் பகுதி நிர்மாண வேலை போன்றன அவதானிக்கப்பட்டன.

### 3.4 பயன்படுத்தப்படாதுள்ள சொத்துக்கள்

பாதுகாப்பு ஏற்பாடுகள் எதுவுமின்றி ரூபா 2.1 மில்லியன் பெறுமதியான கொட்டகல சுரங்கத்திற்கான நான்கு லெட்டிஸ் வளைவுகள் வீதி அபிவிருத்தி அதிகார சபை நிறைவேற்று பொறியியலாளர் அலுவலகத்தில் பயன்பாடற்றுக் காணப்பட்டன.